# பேரன்பின் படிமங்கள்

வேலணையூர் ரஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்பின்
# படிமங்கள்

வேலணையூர் ரஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரன்பின் படிமங்கள்**
(கவிதைகள்)
© வேலணையூர் ரஜிந்தன் (பாலசுந்தரம் ரஜிந்தன்)
முதற்பதிப்பு: ஜனவரி, 2022
வெளியீடு: நூலாசிரியர்
வடிவமைப்பு: எஸ்.விஜய்
அச்சகம்: விஜய் அச்சுப் பதிப்பகம், 172, மில் வீதி, வவுனியா.
077 900 9491 / 077 916 3679
பக்கம்: x + 103
தொடர்பு: 077 770 4055
மின்னஞ்சல்: brajinthan@gmail.com
முகநூல்: வேலணையூர் ரஜிந்தன்
**விலை : ரூ.299**

**Peranpin Padimankal**
(Poems)
© Velanaiyoor Rajinthan (Balasuntharam Rajinthan)
First Edition: January, 2022
Published by: Author
Layout: S.Vijay
Printed by: Vijay Printing Press, 172, Mill Road, Vavuniya.
077 900 9491 / 077 916 3679
Pages: x + 103
Contact No: 077 770 4055
Email: brajinthan@gmail.com
Facebook: வேலணையூர் ரஜிந்தன்
**Price: Rs. 299**

ISBN: 978-624-97367-0-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்பினால்
என்னவருக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

படைப்பாளன் என்பவன் காலத்தின் கண்ணாடி.

கவிதை ஒரு வித்தியாசமான மொழி. அது ஒவ்வொரு கவிஞனின் சொந்த மொழியாக இருக்க வேண்டும். நீங்கள் எழுதும் கவிதை மோசமான கவிதையாக இருந்தால் கூட தலையில் இருந்து உதிர்கின்ற முடி போலவும், விரல்களில் இருந்து ஒடிகிற நகம் போலவும் உங்களிடமிருந்து பிறந்ததாக இருக்க வேண்டும். வாசக உள்ளங்களைத் தமிழ்க் கவிதையின் பால் ஈர்த்து வாசிக்கத் தூண்டுவதாக மட்டுமன்றி, அக்கவிதைகளை எவ்வாறு உள்வாங்க வேண்டும் என்பதற்கு பயிற்சி அளிப்பதாகவும் அமைவதுவே நன்று என்பார் கவிஞர் பாலா.

நீர்வளமுண்டு, நிலவளமுண்டு நிம்மதி மட்டும் தான் இல்லை எங்கள் ஈழத்திருநாட்டில் என்று அம்மண்ணில் வாழும் படைப்பாளிகள் சிலர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். யாழ்ப்பாணத்தின் வேலணையூரில் பல இலக்கிய ஆளுமைகள் தோன்றி இருக்கிறார்கள். அந்த வரிசையில் புதியதாக வளர்ந்து வரும் ரஜிந்தன் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். நடிப்பு, பேச்சு, பட்டிமன்றம், கவியரங்கு என அனைத்திலும் பங்கெடுத்து சிறப்பித்து வருகிறார். சக்தி FM, டான் தொலைக் காட்சி நிகழ்வுகளிலும் தன் திறமையை வெளிப்படுத்தி, சுறுசுறுப்புடன் இயங்கிவரும் ஆற்றல் மிக்க இளைஞர்.

காதல் புனிதமானது, தெய்வீகமானது, திகட்டாதது, உயிரில் கலந்த உணர்வு, என்றெல்லாம் இதனை கொண்டாடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பசி தெரியும், பயம் புரியும், காமம் புரியும், தவறு தெரியும், குற்றம் புரியும். காமத்தின் மறுபெயர் தான் காதலோ? என எண்ணத்தோன்றும் அளவிற்குதான் காதலை திரைப்படங்கள் காட்சி என்ற மாயையில் உருவாக்கி இன்றைய இளைய சமுதாயத்தை பாழ்படுத்தி வருகின்றன. அதிலிருந்து கட்டாயம் இளைய தலைமுறையினர் மீள வேண்டிய அவசியம் இருக்கிறது.

வேலணையூர் ரஜிந்தனுக்கு நன்றாகவே கவிதை எழுத வருகிறது. தன் மண்ணையும், மக்களையும் இயற்கையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் நேசித்து சொற்களில் வடித்திருக்கின்றார். யுத்த பூமியின் குருதி வாசமும், மீன் கவுச்சியும், ரணங்களின் வலிகளும் இவரிடமிருந்து சற்று தள்ளியே நிற்கின்றன. கவிஞர் மீரா சொல்வார், புதுக்கவிஞர்களே கனவுகளையும் படித்து, காதற் கடிதங்கள் எழுதும் நவயுக இளைஞர்களே, காதல் கவிதை யிலேயே நின்று விடாமல் சமூகம் சார்ந்த சிந்தனைகளையும். தமிழ்மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் வளர்த்து எடுப்பதில் முனைப்புக் காட்டுங்கள் என்று, இது இவர் வயதுக்கு உரிய ஆட்கொள்ளும் பருவம் என்பதால் காதலின் வலையில் சிக்கிய மீன்கள் போல் இந்தப் பேரன்பின் படிமங்கள் தொகுப்பு முழுக்கத் துள்ளிக் குதிக்கின்றது.

- காற்றலையில் மிதக்கிறது
  கடிவாளமிடா உணர்வு

- தென்றலுக்கும் பூவுக்கும்
  இடையேயான நெருக்கங்கள்
  இப்போது நெருப்பையே பந்தாடுகின்றது

- கோப்பையில் மீதமாக எஞ்சியிருக்கும்
  தேநீரை மொய்த்த எறும்புகளாய்
  என்னைத் தின்று தீர்த்துக்கொண்டிருக்கிறது
  உன்னைப் பற்றிய நினைவுகள்

- முத்தம் பிரியத்தின் முத்திரை
  யாசிப்பின் ஒத்திகை
  கூடலின் திறவுகோல்
  ஊடலின் முற்றுப்புள்ளி

- உனக்குள் நானும்
  என்னுள் நீயும்
  தொலைந்து போவோம்
  ஆயுட்காலம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக்கிடங்கின் வெளிப்பாட்டினை காதல் ரசம் சொட்ட.. சொட்ட பிழிந்து இந்நூலினை உருவாக்கி இருக்கிறார் தம்பி ரஜிந்தன். இவ்வுலகம் அன்பு நிறைந்த நெஞ்சங்களினால் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. எந்தவொரு கவிதையும் அது எழுதப்பட்ட காலத்தை பிரதிபலிக்கும் தன்மை கொண்டது. என்றாலும் அது கடந்த காலத்தையும், வருங்காலத்தையும் கவனத்தில் கொண்டு கால காலத்துக்குமான ஒரு வித்தை தன்னுள் கவித்துவத்தோடு தாங்கி நிற்கிற போதுதான் நிலைபேறு எடுக்க முடியும். எந்த ஒரு படைப்பாளனாக இருந்தாலும் தான் வாழும் காலத்தின் கண்ணாடியாக இருக்க வேண்டும். அப்படி இல்லாது போனால் கால ஓட்டத்தில் அந்தப் படைப்பாளியும் காணாமலே போய்விடுவான்.

தம்பி ரஜிந்தன் இனிவரும் காலங்களில் மிகவும் அரிய பல காத்திரமான கவிதைகளையும், புனைவுகளையும் படைத்திடுவார் என உறுதியாக நம்பலாம் ஆழ்ந்த வாசிப்பும், பட்டறிவும் அவரை ஈழத்து இலக்கிய உலகில் உரிய இடத்திற்கு கொண்டு வந்து சேர்க்கும் என்பது திண்ணம். என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்
**செந்தமிழினியன்**
புதுச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கலை என்பது உணர்ச்சிகளின் வெளிப்பாடு இங்கே கற்பனைகளும், உயர் சிந்தனைகளும் பரிபூரணத்துவம் பெறுகிறது. கலைஞர்கள் நடிப்பாகவும், இசையாகவும், ஓவியமாகவும், சிற்பமாகவும், இலக்கியமாகவும் பாராட்டத் தகுந்த இரசனைக்குரிய பண்பாடு, வரலாறு, அழகியல் போன்றவற்றைப் பிரதிபலித்து செவ்வனே படைத்து விடுகின்றார்கள்.

ஆரோக்கியமான படைப்புகள் உளவெளிச்சியில் விளைவுகளை ஏற்படுத்தவல்லன அவ்வாறே கவிதையும் முதன்மை பெறுகின்றது. பன்னெடுங்காலமாக பல்வேறு பரிணாமங்களைப் பெற்று தமிழ் மொழியின் பெருமைகளைத் தன்னகத்தே சுமந்து வந்த தனிச் சிறப்பு கவிதைக்குரியது.

அவ்வகையிலே தமிழின் மீது கொண்ட ஆத்மீகப் பற்றுதலும் கவிதை மீது கொண்ட தீராக் காதலும் எனது ஐந்தாவது படைப்பான "பேரன்பின் படிமங்கள்" கவிதைத் தொகுப்புத் தோன்றுவதற்கு ஊற்றுக்கண்ணாக அமைந்தது.

என் பேரன்பிற்குரிய வாசக உள்ளங்களே இங்கே படைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு கவிதையும் ஏதோ ஒரு வகையில் உங்கள் நேசத்திற்குரியதாக மாறும் என்பது எனது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

எனவே என் கவிப்பயணத்தில் உறுதுணை நிற்கும் கவிஞர்கள், உறவினர்கள், நண்பர்கள், அணிந்துரை வழங்கிய கவிஞர் செந்தமிழினியன், மற்றும் இந்நூலுக்கான அட்டைக் குறிப்பை வழங்கிய கவிஞர் வேலணையூர் தாஸ் அவர்களுக்கும் உள்ளார்ந்த நன்றியையும் பேரன்பையும் உரித்தாக்குகிறேன்.

மேலும், நூலுக்கான அட்டைப்படத்தை வடிவமைத்து வழங்கிய கவிஞர் லார்க் பாஸ்கரன் அவர்களுக்கும், அட்டைப் படத்திற்காக என்னை ஓவியம் தீட்டியிருக்கும் ஓவியர் க.முருகன் அவர்க ளுக்கும், நூலை சிறப்புற வடிவமைத்து, அச்சுப்பதித்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் அச்சகம் வவுனியா, அதன் உரிமையாளர் எஸ்.விஜய் அவர்களுக்கும், என் எழுத்துக்களுக்கு ஊக்கம் அளித்து, உறுதுணை நிற்கும் நாகலிங்கம் சுந்தரசிவம் ஐயா அவர்களுக்கும் பேரன்பின் நேசங்களை உரித்தாக்குகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக பேரன்பின் படிமங்கள் கவிதைத் தொகுப்பிற்கான ஆதரவும் அனுசரணையும் வழங்கியிருக்கும் மீரா பியூட்டி கேர் சுவிட்சர்லாந்து அதன் உரிமையாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி லிதியா மயூரன் அவர்களுக்கும், சகோதரி வசந்தமலர் பாலச்சந்திரன் அவர்களுக்கும் ஆத்மார்த்த நன்றியினைப் பதிவு செய்கிறேன்.

"என் மூச்சும், வாய்ப் பேச்சும், கவி வீச்சும்
தமிழையே உயர்வாய்ப் போற்றும் - என்றும்
தரணியில் தமிழைப் பறை சாற்றும்!"

**வேலணையூர் ரஜிந்தன்**
(பாலசுந்தரம் ரஜிந்தன்)
ஆசிரியர்,
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வரம் | 01 |
| வணங்குகிறேன் | 02 |
| அன்பிலோர் ஆலயம் | 04 |
| பயணக் குறிப்பு | 05 |
| ஆத்ம நேசம் | 06 |
| பனிக்கால மேகங்கள் | 08 |
| பொதுமையே இவ்வுலகு | 10 |
| ஊர் அடங்கும் காலம் | 12 |
| ஏழைக்குக் கல்வி எட்டாக் கனியா? | 14 |
| யாரறிவார் ஏழை ம(மா)னம் | 15 |
| வாழலாம் வைகலும் | 17 |
| கொரோனாப் பாட்டு | 18 |
| ஆத்ம நேசத்திற்கு அகவை நாள் | 19 |
| இயற்கை மொழி | 20 |
| கல்லூரிக் கனாவே | 22 |
| குயில் பாட்டு - சித்திரை 2020 | 24 |
| பிரபோத வெளி | 26 |
| துயரத்தின் கால வெளி | 27 |
| அந்தகார நாள்களில் | 28 |
| அவள் அழகில் நனைகிறது அந்திமழை | 29 |
| ஆலகால நேசம் | 30 |
| பூங்காற்றாள் | 31 |
| மௌனம் | 33 |
| கனவே கலையாதே | 34 |
| பேரழகு | 35 |
| இனிய விடம் | 36 |
| மகிழ்வாக நீ இருக்கிறாய் | 37 |
| வாழ்வின் எல்லை வரை | 38 |
| கள்வனின் காதலி | 40 |
| நினைவு ஒரு பறவை | 41 |
| காதலின் உயிரோசை | 42 |
| நினைவுகளோடு | 43 |
| உள்ளத்தில் உறைந்திருக்கிறாய் | 45 |
| கவிதைக்காரி | 47 |
| நிழலும் கவிதை பூக்கும் | 48 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவளே! 49
இனிய காதலே 51
ஒற்றை மரக்கிளை 52
அச்சுத்தாளின் ஆதிக்கம் 53
கொடியிடை சிற்பம் நீ 55
வெறுமையாகிறேன் 56
ஓவியம் ஒன்று வரைந்தாக வேண்டும் 58
நெஞ்சுக்குள்ளே உன் நினைவு 60
மேலாடையாய் நிலா 62
அன்பிற்கு ஆண்டொன்று 63
குருவியின் மொழி 64
நினைவின் கொடுந்தீ 66
அலைபாயும் மனது 67
விழிவழி தொலைதல் 68
பேரமைதிக்கான வெற்றிடம் 69
ஆத்மீகா 71
மனதோடு மழைக்காலம் 72
இருள் சூழ் நினைவு 74
காதல் முத்தம் 75
மௌனப் பெரு விசும்பல் 76
காதலோடு கலத்தல் 77
பிரியங்களுக்கு உருவமில்லை 79
யாழ் தேவி 80
பெருங்காட்டு நேசம் 81
சிறகு முளைத்த புலர்வு 83
பிட்டதிகாரம் 84
பிரிவு வேண்டும் 86
சேலையுடுத்திய தங்கரதம் 88
பேரன்பின் படிமங்கள் 89
மழையின் பாடல் 91
நீளும் பெருந்துயர் 93
புரிதலின் உயிர்ப்பு 95
கொரோனா கொடுந்துயர் 96
கொரோனாவின் கைதி 98
தலைப்பில்லாக் கிறுக்கல்கள் 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரம்

அழகே பைந்தமிழே
ஆதியில் உதித்தவளே
எழிலேயுன் பெருமையெல்லாம்
எங்ஙனம் யானுரைப்பேன்!

அமுதே கற்கண்டே
நாவினிக்கும் தேன்சுவையே
கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்தில் உதித்தவளே!

முச்சங்கம் வளர்த்திட்ட
சங்கத் தமிழ்த் தாயே
தொன்மையின் வடிவாகி
புகழ் பரப்பும் செம்மொழியே!

உலகத்து மொழிகளிலே
ஈடு இணையற்ற தாயே
காவியங்கள் போற்றுகின்ற
வையத்துப் பேரொளியே!

பொன்னோ பேர்புகழோ
பொருளோ எதுவும் வேண்டாம்
இன்னோர் பிறவியுண்டேல்
தமிழ் பேசும் வரம் வேண்டும்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணங்குகிறேன்

ஆயிரம் உறவுகள்
அவனியை நிறைக்க
அன்னையுன் அன்பினை
எவருண்டு நிகர்க்க?

தெய்வத்தை தேடினேன்
கோயில்கள் முழுக்க
ஓலைக் குடிசையில்
என்தெய்வம் இருக்க

தூற்றுவார் போற்றுவார்
போற்றியும் தூற்றுவார்
ஏற்றிட வழிகாட்ட
உனையன்றி யாரிங்கு

பாசத்தை வேடமாய்
அணிந்திட்ட பலருண்டு
பாசமே உருவமாய்
நீமட்டும் தானுண்டு

குரலிலே உடல் நலம்
அறிகின்ற வைத்தியம்
வார்த்தையில் மனநிலை
உணர்கின்ற மகத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேனே வதனத்தில்
தியாகத்தின் ஒளிவட்டம்
தாயேயுன் அணைப்பிலே
அகன்றது துயர் மொத்தம்

பாட்டுடைத் தலைவியை
பாடுவேன் என்சித்தம்
பாவாலே தினம் போற்றி
வணங்குவேன் உனை நித்தம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிலோர் ஆலயம்

வெய்யிற் காலத்து
நிழலைப் போலவும்

மழைக் காலத்துக்
குடையைப் போலவும்

முட்களின் பாதையில்
பாதணியாகவும்

கண்ணீர் துடைக்கும்
கரங்களாகவும்

உயரங்கள் ஏற்றிடும்
ஏணியாகியும்

இடர்களைப் போக்கிடும்
எனக்கான வழிகாட்டி

வலிமை சேர்க்கின்ற
தன்னம்பிக்கை வடிவம்

மண் தொட்ட நாள் முதல்
மனந்தொட்ட என் மகான்

அன்னையைப் போலவே
பாசத்தின் ஆகாயம்

ஒரு நாள் போதாதே
தந்தைக்கு மகுடம் சூட்ட

இதயத்தால் போற்றியே
என்றென்றும் அர்ச்சிப்பேன்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணக் குறிப்பு

இருள் பூசிய வானம்
கன்னங்களை வருடியபடி
குளிர் சுமந்து வரும் காற்று
இளமாலை நேரத்து மழை

இதயத்தை நிறைக்கும்
காதல் பாடல்கள்
சாரல் தூறுகின்ற வானம்
சன்னலோரத்து இருக்கை

அவளுக்கும் எனக்குமான
இடைவெளியற்ற நெருக்கம்
நேசத்தைப் பங்கு போடும்
இரு உள்ளங்கள்

இந்தத் தருணங்களே
வாழ்வின் இன்பப் புதையல்கள்
இப்போது இந்தப் பேருந்து
காதலைச் சுமந்தபடி விரைகிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம நேசம்

ஆழ்கடலுக்குண்டான
பேரமைதியைப் போலே
என் ஆத்மாவுக்குள்ளே
படர்ந்து போயிருக்கிறாய்

என் மௌனப் பரப்பை
நினைவுகளால் நிரம்பி
ஆத்ம நேசத்தால்
ஆளுகை செய்கிறாய்

தனிமைப் பெரு வெளிக்குள்
ஒற்றைப் பறவையாய்
எண் திசையெங்கிலும்
ஆக்கிரமித்துப் பறக்கிறாய்

கனவுகளால் நிறைந்த
கற்பனைப் பெருங்காட்டில்
சிந்தனைப் புலர்வுகளை
சிருஸ்டித்து விடுகிறாய்

நுரைகளைக் கொப்பளிக்கும்
பேரலைகளைப் போலவே
உன் நாமத்தை உச்சரிக்கிறது
எப்போதும் என் உள்ளுணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஆத்மார்த்த பிரியத்தை
அள்ளி எடுத்த நாழிகையில்
ஆழப் புதைந்து கிடக்கிறது
இப்போதும் என் ஆசைகள்

உன்னையே சிலாகித்த படி
ஆசுவாசமடைகிறது
எப்போதும் போல்
இப்போதும் என் நேசம்!

●

(உதயன் 07.07.2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனிக்கால மேகங்கள்

கண்ணீரால் நிரம்பியிருக்கிறது
ஒரு பேராழி நேசம்

ஓவியம் ஏந்திய காகிதம் ஒன்று
கசக்கி எறியப்பட்டிருக்கிறது
அநாதரவாகத் தெருவினிலே

இளவேனிற் காலக்
கவிதைகள் எல்லாம்
பொருளற்றுக் கிடக்கின்றன

வைகறை வானின்
புலர்வுகள் எல்லாம்
வண்ணம் இழந்துபோயின

பனிக்கால மேகங்களும்
வலிகளால் நிரம்பியிருக்கின்றன

பருவ காலங்களில்
மேலுமோர் கனவுதிர் காலம்
இணைந்தாகிவிட்டது

பெரும் ஏமாற்றத்தின்
பின்னரான துயர நிறைவு இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாக்கால ஒளிகள் கூட
ஒய்வெடுக்காத இருட்டறை தான்
இப்போது இந்த உள்ளக்கிடக்கை

அடுக்கி வைத்த கனவுகள் எல்லாம்
சாம்பலாகிப் போன பின்னாளில்
காத்துக் கிடக்கிறேன்
கனவுகளிற்கு நிறம் தீட்டுவதற்காய்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமையே இவ்வுலகு

சுற்றும் உலகம்
எப்போதும் போல் சுற்றுகிறது

காற்றும் கதிரவனும்
பால் நிலவும் வான் முகிலும்
இயங்கியபடியேதான்

நீலக் கடலும்
துள்ளும் அலையும்
செடியும் கொடியும்
மரமும் மலையருவியும்
எப்போதும் போலவே

பட்சியும் பூச்சியும்
நீர்வாழ் உயிரியும்
நிலம் வாழ் பிராணியும்
விலங்குகளும் எல்லாமே
தம் நிலையில் மாறவில்லை
இன்னும் சற்று
மகிழ்வோடு உலாவுகின்றன

ஆனால், மானிடா நீ மட்டும்?

நீயே உயர்வென்றாய்
எல்லாமே அடிமையென்றாய்
இறையையும் மறந்தாய்
உலகையே ஆள எண்ணி
அற்ப கனவுகள் கண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது,
கண் காணாக் கிருமிக்கு அஞ்சி
உயிர் பிடித்து வீட்டுக்குள்ளே
முடங்கிவிட்டாய் மரணபயத்தில்

வீட்டைக் காவல் காக்க
நன்றியுள்ள பிராணியை
கட்டிப் போட்டாய்

பிள்ளை மொழி பேசுமந்தச்
செல்லப் பறவையைக்
கூண்டிலடைத்தாய்

மிருகக்காட்சிச் சாலையென்று
உயிரினங்களை எல்லாம்
சிறையிலிட்டாய்

நீ வாழப் பிற உயிரை
உணவென்றும் கொன்றழித்தாய்

புரிந்ததா மானிடா
இன்று,
உன் நிலை எதுவென்று?

எல்லா உயிர்க்கும்
பொதுமையே இவ்வுலகம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் அடங்கு(ம்) காலம்

ஆரவாரத் தெருக்களில் எல்லாம்
அதிகமாக அமைதி பூத்திருக்கிறது

இயந்திரங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளத்
தன்னைத் தானே
புதுப்பித்துக் கொள்கிறது சூழல்

அசுரகதி வாழ்வியலில் இப்போது தான்
நேசத்தளிர் அரும்பியிருக்கிறது

நாழிகைகளை வியாபாரம் செய்த
முதலாளிகள் வர்க்கமும்
பாசத்தை முதலிட ஆரம்பித்திருக்கிறார்கள்

நிற்க நடக்க ஓய்வின்றி
ஓடியோருக்கெல்லாம்
இது விடுமுறைக் காலம்
அன்னையரைத் தவிர

இங்கே உதவும் கரங்களே
உன்னதம் பேசுகின்றன;
அதிகம் இளைஞர்களாலே
இவை நிகழ்ந்திருக்கின்றன - ஓரிரு
புகைப்படப் போலிகளைத் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைகளில்
காக்கும் கடவுள்கள் கண்முன்னே
வீதிகள் தோறும்
காவல் தெய்வங்கள் கடமையிலே

வீட்டுக்குள் இருப்பதே
நம் நாட்டுக்கான நன்றிக்கடன்
சமூக இடைவெளியே
மனித இனத்திற்கான அர்ப்பணிப்பு

இது ஊர் அடங்கு(ம்) காலம்;
கொ(ரோனா)லைகாரன் கற்பிக்கும்
மனித நேயத்திற்கான நேரம்.

●

(07.04.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழைக்குக் கல்வி எட்டாக் கனியா?

காலங்களோ பல மாற்றம்
கல்வி முறை முன்னேற்றம்
அன்று தொட்டு இன்று வரை
ஏழைக்குக் கல்வி ஏமாற்றம்

மண் குடிசை வாழ்விடமாய்க்
கூலித் தொழில் செய்யும் ஏழை
ஒரு வேளை உணவு சமைக்க
காத்திருக்கும் அடுப்பங்கரை

வறிய மக்கள் வாழும் ஊரில்
இணைய வழிக் கல்வி என்றால்
மாற்று உடையே அற்ற சிறுவன்
ஸ்மாட் போனில் கற்பதெப்போ?

வைபர் வாட்சப் யூற்றூப் எல்லாம்
வசதி படைத்தோர் கற்றுக்கொள்ள
ஊரடங்கு காலம் முடங்கும்
தினக்கூலி மகன் நிலமை என்ன?

கல்வி இன்று கனவு தானா?
ஏழைச் சிறுவர் தெருவிற் தானா?
நாளை உலகை வெற்றி கொள்ள
ஏழைக்கும் கல்வி சேர வேண்டும்!

●

(25.05.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரறிவார் ஏழை ம(மா)னம்

ஒட்டிய வயிற்றோடு
பட்டினியின் ஓர் உருவம்
பாவிகளின் பிடியினிலே
பசியில் வெந்த வடிவம்

எரியாத அடுப்படியில்
தவம் இருக்கக் குடும்பம்
சில பருக்கை உணவுக்காய்
வழி தேடிய பாவம்

உதவிடவே யாருமற்று
உருக்குலைந்த மேனியது
வேறு வழி ஏது மற்றே
தென்னை மரம் நாடியதே

ஊரு கூடிக் கட்டி வைத்து
திருடன் பட்டம் சூட்டி விட
ஏழையவன் நிலையறிய
காவலர்க்கும் கருணையேது

இரக்கமற்ற மனிதகுலம்
மனிதமற்றுப் போனதிங்கு
மனச்சாட்சி என்பதெல்லாம்
பொருளற்ற வெறும் பேச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருக்கும் புகழுக்கும்
போட்டியிடும் வையமிது
சுயநலத்தின் சூழ்ச்சியிலே
யாரறிவார் ஏழை ம(மா)னம்

வலியவர்கள் வாழ்ந்திடவே
எளியவர்கள் மாய்ந்திடவே
சட்டங்களும் அமைந்திருக்கு
அநீதிகளும் சூழ்ந்திருக்கு!

● (09.04.2020)

இந்தியா கேரளாவில் பசியால் ஓர் ஏழை உணவு திருடியதற்காய் கட்டிவைத்து அடித்துக் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் எழுதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழலாம் வைகலும்

நல் விதைகளுக்குள்ளே
காத்திருக்கிறது பசுமை உலகு!
அதிகாலைச் சூரிய ஒளிக்கு
அவனிக்கே வலுவூட்டும் அழகு!

நாழிகையின் சுறுசுறுப்புக்குள்
ஒளிர்கிறது வைகறை விழிப்பு!
நடைப்பயிற்சியின் விளைவு
திடகாத்திரம் மிகு உடலமைப்பு!

ஆழிக்கரைக் காற்றுக்கெல்லாம்
ஆயுள் நிறைக்கும் சக்தி!
வீட்டுத்தோட்டச் செடிகளுக்கு
அருமருந்தின் அற்புத வண்ணம்!

புன்னகை நிறை வதனங்களில்
துன்பங்கள் மிகத் தொலைவு!
உலக உயிர்களின் நேசிப்பே
மகிழ்ச்சியின் ஒருவழிச் சாலை!

வலிமை மிகு வாழ்க்கைக்கு
ஆதாரம் அளவான ஆகாரம்!
ஆரோக்கியத்தின் காப்பரணாய்
இயற்கை ஒன்றே கூடாரம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாப் பாட்டு

கூடிக்குலாவிடும் காலமல்ல - இது
வேடிக்கையானதோர் நேரமல்ல
நாளை நல்லதொரு காலம் வரும் - வரை
ஒதுங்கிடல் வேண்டும் நம் வீட்டுக்குள்ளே

காதில் விழுகின்ற செய்திகளும் - கூட
நாளை நமக்குமே நேர்ந்திடலாம்
நம்மாலொருவர்க்கும் தீங்கு நேரா - வண்ணம்
வாழ்ந்திடல் வேண்டும் நாம் வையத்திலே

முகத்துக்கு முகவுறை மாட்டிடுவோம் - நிதம்
கைகளை நன்றாய்க் கழுவிடுவோம்
சமூக இடைவெளி பேணி நன்றே - நன்கு
சுகாதார நெறி முறை காத்திடுவோம்

வைத்தியரும் காவல் துறையினரும் - தினம்
ஆற்றிடும் சேவைக்கு ஈடு உண்டோ
நாட்டிற்கு நல்லது செய்வதெனில் - இன்று
வீட்டிலிருப்பதே உத்தமமே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம நேசத்திற்கு அகவை நாள்

வசந்த கால வான்முகிலாய்
நேசத் தூறலில் எனை நனைத்து
பசுமை வனத்துப் பூஞ்செடியாய்
பாசத் தளிர்கள் எனில் துளிர்த்தாய்

என் தேசம் பேசும் தாய்மொழியாய்
உன் நாமம் ஒன்றே ஒலிக்கிறதே
வீசும் காற்றின் மொழிகளெல்லாம்
உன் வாய்மொழி அன்றே வேறில்லை

எனக்காய் மண்ணில் உதித்தவளே
என்னுதிரம் முதலாய் உனைப் பதித்தேன்
இறைவன் வரங்கள் தர நேர்ந்தால்
உனையென்றும் நீங்கா வரம் கேட்பேன்

கண்ணின் இமையாய் எனதன்பில்
கண்ணின் ஒளியாய் நீயிருக்க
காட்சி எல்லாம் உன் உருவம்
என் உயிரில் நீயே முழுவடிவம்

நீ அகவை காணும் இந்நாளும்
நல் வரமாய் மாறுமினி எந்நாளும்
நலமாய் வளமாய் மகிழ்வோடு நீ
நிறைவாய் வாழ வாழ்த்துகிறேன்!

●

(25.08.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை மொழி

ஓர் இளமாலை
இயற்கையோடு
இலயித்திருக்கிறது மனது

காற்றைத் தாலாட்டும்
தென்னங்கீற்றுக்கள்
புது ராகம் மீட்டுகின்றன

ஓசை மட்டும் கேட்கிறது
புரியா மொழியொன்றின்
அமுதப் பிரவாகம் அது

பச்சைக் கிளிகளும்
கூட்டமாக வந்தமர்ந்து
வார்த்தைகள் பரிமாறுகின்றன

காக்கைகளும் குருவிகளும்
குதூகலமாய் உரையாட
மகிழ்ந்தசைந்து ஆடுகின்றன
தென்னை மரங்களும் ஓலைகளும்

அணில்கள் கீச்சிடவும்
குயில்கள் பாடிடவும்
இம்மொழி அழகாகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் மழையும்
கதிரவன் ஒளியும்
இம்மொழியைத் தழுவியிருக்கின்றன

மனவளக் கலைகூட
இம் மொழியின் சிறு கூறே

துயரம் தீர்க்கும் மருந்தும்
தனிமை போக்கும் எழிலும்
இம்மொழியின் பண்பியலே

காற்றுத்தான் அனைத்திற்கும்
தாய்மொழி ஆசான்

கற்பதுவும் கேட்பதுவும்
மகிழ்வதுவும் மனம் நிறைவதுவும்
இயற்கை மொழி ஆத்மார்த்தமானது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கனாவே

பட்டாம் பூச்சியாகப் பறந்திருக்கிறேன்
கல்லூரிச் சாலையெங்கும்
அவள் வண்ணங்களோடு

கறுப்பு வெள்ளை
எழில் கொள்ளும்
காலைப் பிரார்த்தனைக்கு
வானவில்லின் வண்ணம்

அவள் வரவுகளால்
பூங்காவாய் மாறும்
விளையாட்டு மைதானம்

இதழ் விரியாப் புன்னகை
மயிலிறகாய் வருடும் வார்த்தைகள்
அத்தனையும் கவிதைகள்

பூமி நோகா மென்பாத நடை
தவறி விழும் ஓரப் பார்வை
பேரானந்தப் பொழிவுகள்

வகுப்பறை ஒளிரும்
அவள் சேலை உடுத்திய
தேயா நிலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சூடிக் கொள்ளும்
வெள்ளிக்கிழமை ஆலயம்
மலரின் இலக்கணமவள்

மங்கல விழாக்களுக்காய்
நிகழும் நாடக ஒத்திகைகள்
அங்கும் அவள் தேவதை

என் கைபேசி
அவள் காதோரம் கதைபேசும்
அதில் அவள் விரும்பும் பாடல்கள்

அவளுக்காய் என்னையே
தூது விட்டிருக்கிறான்
ஓர் இரண்டாம் வருட மாணவன்

எல்லாமே நினைவூட்டியிருக்கிறது
அவள் எழுதிக்கொடுத்த பிரியாவிடை நாள்
மடலொன்று!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயில் பாட்டு - சித்திரை 2020

சந்தத்தில் குயிலொன்று
பாடுது நம்வீட்டில்
சித்திரை பிறந்ததை
கூவுது தன்பாட்டில்!

அயலோடு கூடாத
அவலத்தைப் பார்த்ததால்
கூண்டுக் கிளிபோல் நாம்
ஆனதைப் பாடுதோ?

முகமூடி மனிதராய்
அலைவதைக் கண்டதால்
தெருவெல்லாம் வெறுமையை
உணர்ந்துதான் கூவுதோ?

ஊரெல்லாம் கலக்கத்தில்
ஊரடங்கு காலத்தில்
கிருமியால் அவதியுறும்
நிலை கண்டு கதறுதோ?

புத்தாடை பலகாரம்
ஆரவாரம் அற்றதால்
சொந்தங்கள் சுற்றங்கள்
துயர் கண்டு கலங்குதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு பிறந்ததில்
புது வாழ்க்கை மலர்ந்திட
நலமோடு நாம் வாழ
நல்வாழ்த்துப் பாடுதோ?

●

(13.04.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபோத வெளி

பச்சைக் கம்பளம்
போர்த்திக் கிடக்குமிந்தப்
பரந்த மண்மேட்டில்
லாபகமாய் தன்னுடல் சாய்கிறது
கதிரவன் வெள்ளொளி

பட்டாம்பூச்சிகளும் தும்பிகளும்
பறந்து பறந்து விளையாடும்
மைதானம் ஆகிவிட்டது
இந்தப் பசுமைப் பெருவெளி

மழலைச் சிரிப்பினை ஒத்த
பூமித்தாயவள் மகிழ் முகமும்
புதுமைகள் பூத்துக்கிடக்கும்
தேவலோகப் பூந்தோட்டமும்
ஒன்று சேர்ந்த வனப்பு இது

புதிதாய்ச் சில வரவுகளாக
செடிகள் பிரசவித்திருக்கின்றன
பல வண்ண வாசனை மலர்களை

காலையிள வெயிலில்
குளிர் துவட்டி வருமிளங் காற்று
இயற்கை தழுவி எனைத் தீண்டிட
ஞானமடைகின்றன ஐம்புலன்கள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரத்தின் கால வெளி

வானம் தெருவில்
உலாவிக்கொண்டிருக்கையில்
தெருக்களின் ஓசையை
மௌனித்துச் செல்கிறது காற்று

முகங்கள் தொலைக்கப்பட்ட
கிருமி சூழ் வையத்தில்
மனித நெருக்கங்களுக்குத்
தடை விதிக்கப்பட்டிருக்கிறது

துயரத்தின் கால வெளியில்
நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கச்
சூழல் ஒரு யாசகனைப் போல்
கையேந்திக் காத்திருக்கிறது

போர்க்காலத் தேசமாய்
பார்க்கும் இடமெல்லாம்
சுதந்திரங்கள் மறுக்கப்பட்டு
முடக்கப்பட்டு விட்டான் மனிதன்

அச்சமும் பயமும் முற்றுகையிட்ட
பெரும் பொழுதுகளே
இந்நாள்களின் புலர்வுகளும்
அந்தி சாய்தல்களும் என்றாகின

அநாதரவின் சிறைக்குள்ளே
அகப்பட்டுக்கிடக்கும் எந்தன்
தனிமையில் ஒட்டியிருக்கிறது
மரண பதகளிப்பின் வாடை!

●

(31.10.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தகார நாள்களில்

மேக மூட்டம் கொள்ளாத
பின் மதியப் பொழுதொன்றில்
வெம்மையின் கோரத்தில்
சருகாகிக்கொண்டிருக்கும்
சில இளந்தளிர்களைப் போலவும்

கால் தவறிப்போன தொரு
கானகத்தில் திசை தொலைத்து
நம்பிக்கை இறுதி நாள்களில்
உருகிக் கொண்டிருக்கும் சில
வழிப்போக்கர்களைப் போலவும்

முயற்சிகள் பயனற்றுப் போன
கொந்தளிக்கும் பெருங்கடலில்
காற்றோடும் அலை வீச்சோடும்
தத்தளிக்கும் பயணப் படகு போலவும்

காலத்தின் ஏட்டில் நிகழ்ந்திருக்கும்
இலக்கண வழுவாகவும்
கிருமியாலும் வறுமையாலும்
சபிக்கப்பட்ட பெரும் பாவமாகவும்

இவ் அந்தகார நாள்களில்
ஒவ்வொரு ஊரிலும் ஏழைகள்
நம்பிக்கை வற்றிய வெறுமையோடு
உயிர்பிடித்துக் காத்திருக்கிறார்கள்
வாழ்தலெனும் பெரும் தவத்திற்காக.

●

(28.04.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள் அழகில் நனைகிறது அந்திமழை

இருள் நிறைந்த வானம்
கரைந்து கரைந்தே தீர்கிறது
அவள் கூந்தல் இருளுக்கு அஞ்சி

அவள் புன்னகைக்கு
ஈடு கொடுக்க முடியாமலே
உடைந்து உடைந்து வீழ்கிறது
தோற்றுப் போன மின்னல்

அவளில் நனைந்ததால்
ஜலதோசம் பிடித்துப் போனது
சொட்டுச் சொட்டாய் தூறும்
இந்த அடை மழைக்கு

இடி இடித்த முழக்கமும்
அடங்கிப் போனது
அவள் கோபப் பார்வைக்குப் பயந்திருக்கும்

அவள் பாதம் தழுவிய மண்ணில்
தேகம் புதைத்து உறைகிறதே
மோட்சம் அடைந்து விடும்
வானிலிருந்து வந்த இந்த மழைத்துளிகள்!

●

(தினக்குரல் 03.02.2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலகால நேசம்

ஆத்மீகா என் திசைகளை ஆக்கிரமித்து
நேசத்தை பரப்பிக்கொண்டிருக்கிறாள்

அண்ட வெளியெங்கும்
தங்குதடையற்று பிரியங்கள்
அந்தரத்தில் மிதந்திடலாயிற்று

ஒரு பொழுதேனும்
சிறு கணமேனும்
நீங்கிடக் கருதா நெருக்கத்தை
இத்தருணத்தில் ஆன்மா
உணர்ந்து கொண்டிருக்கிறது

ஒரு பெருவனத்திற்குள்
ஒளிக்கீற்றுக்கள் மௌனமாக
ஊடுருவுவதைப் போல்
மூச்சுக் காற்றின் ஸ்பரிசம்
தேகமெங்கும் படர்ந்து கொள்கிறது

பேராழிக்குள் மறைந்து கொண்ட
ஒரு மழைத்துளியைப் போல்
இப்பெரு நேசத்திற்குள் எனதுள்ளம்
உறைந்துபோயிருக்கிறது

இப் பேரண்டத்தையே
கட்டிப்போட்டிருக்கும் பெருந்தவமிது
இரு நேசங்களுக்கிடையிலான
உயிர்ப்புள்ள பிணைப்பென்றானது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காற்றாள்

என்னோடு நீயும்
உன்னோடு நானும்
மகிழ்ந்திருக்கும் பொழுதுகள்
அவ்வளவு அலாதியானவை

நீ மட்டுமே நன்கறிந்திருக்கிறாய்
என்னை ஆற்றுப்படுத்தும்
அத்தனை வித்தைகளையும்

மாலையும் சரி காலையும் சரி
பொருள் கொள்வதெல்லாம்
உனது வருகையினாலேதான்

சில்லென்ற உன் சீண்டலிலே
நில்லாமல் நீள்கிறது
பேரன்பின் பேராறுதல் ஒன்று

கடற்கரைச் சாலைகளைக்
கடக்கையில் எல்லாம்
புதுப்புதுக் கவிதைகள் பேசுகிறாய்

மரங்களின் நிழல்களில் எல்லாம்
என்னோடமர்ந்து மகிழ்ந்துறவாடுகிறாய்

மூங்கிற் காடுகளும்
சவுக்கு மரத்தோப்புக்களும்
உனைக்கண்டால் சங்கீதம் பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்குடிசையும் மாடமாளிகையும்
எப்போதும் உனக்கு ஒன்றுதான்

இந்த ஏழைக் கவிஞனையும்
செல்வந்தன் ஆக்கிவிட்டாய்
தங்கமாலையில் செல்லவருடலில் பூங்காற்றே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம்

மௌனம் என்பது
கவலையா?
கண்ணீரா?
சுகமான சுமையா?

வெறுப்பின் வெளிப்பாடா?
கோபத்தின் உச்சமா?
துயரத்தின் தோற்றுவாயா?
தனிமையின் கூட்டாளியா?

அல்லது இனிமையா?
இனம்புரியா ஆனந்தமா?
இதமான அவஸ்தையா?
பொறுமையின் உயர் தோற்றமா?
ஒட்டுமொத்த பிரச்சினைகளின்
ஒற்றைத் தீர்வா?

அது ஓர் ஆற்றுப்படுத்தற் கலை
வார்த்தைகள் கடந்த பேசா மொழி

மழலைகளின் செல்லக் கோபம்
குமரிகளின் காதற் பிடிவாதம்
பெரிசுகளின் அனுபவ முதிர்ச்சி
ஞானிகளின் பேரமைதி

ஆம்,மௌனம் ஒரு படிப்பினை
மௌனம் ஒரு தேடல்
மௌனம் ஒருவித ஞானம்

**அது ஓர் அழகிய கவிதை!**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவே கலையாதே

இருள் நீக்கி ஒளி ஊட்டி
உலா வந்த நிலவு போல்
விழி மூடித் துயில் போர்க்கக்
கனவில் வந்த காரிகையே

நினைவோடும் நீங்காமல்
எனை வாட்டும் அழகுருவே
தூங்கினாலும் விலகிடாமல்
விழிக்குள் நிற்கும் பேரழகே

முப்பொழுதும் தப்பிடாமல்
எப்படியும் என்னுடன் நீ
சத்தமின்றிச் சலனமின்றிச்
சித்தம் குடி கொண்டவள் நீ

விண்ணுக்கும் மண்ணுக்கும்
தூது போன மழைத்துளி போல்
பார்வையாலே தூது விட்டு
மனதிற்குள் நீ நுழைந்தாய்

கற்பனைச் சிறகு தனை
காற்றினிலே நான் அசைத்து
கண்டம் பல கடந்து விட்டேன்
கனவினிலே உனைக் கண்டு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரழகு

மலரை விட
மிக அழகு
இலை மீது மழைத்துளி

பகலை விட
மிக அழகு
நிலாக் காயும் இரவு

சந்திரனை விட
மிக அழகு
மழைக்காலச் சூரியன்

வானவில்லை விட
மிக அழகு
பறவைகள் வானம்

வார்த்தைகளை விட
மிக அழகு
காதலியின் மௌனம்

புன்னகையை விட
மிக அழகு
மழலைச் சிணுங்கல்

அவளை விடப்
பேரழகு
அவள் நினைவுகள்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய விடம்

நீருக்குள் வீழ்ந்த கைபேசியாய்
முற்றும் நனைந்திருக்கிறது
உன் நினைவுகளாலே என் சிந்தை

என் நெஞ்சறைக்குள்
பாறாங்கற்களாய்
கனத்துக் கொண்டிருக்கின்றன
உந்தன் நினைவுச் சிதறல்கள்

உன் நினைவுகளோடே
ஊர்ந்து ஊர்ந்து
களைத்துக் கொள்கின்றன
திசையறியா எந்தன் நாழிகைகள்

இலை உதிர்ந்த மரமாக
இறகொடிந்த பட்சியாக
இருள் குடித்த சாமமாக
நிசப்தம் நிரப்பிய வனமாக
தவிப்பே எங்கும் வியாபித்திருக்கிறது

மூக்குக் கண்ணாடி தேடும்
வயோதிபனாக அல்லற்படுகிறது
துயர் இருளுக்குள் எந்தன் உள்ளம்

இத்தனையும் நிகழ்த்திய
அந்தச் சிறு ஊடலுக்குள்ளே
புதைந்து போயிருக்கிறது
உனக்கும் எனக்குமான
பாசப் பெரு விருட்சத்தின் வித்து.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வாக நீ இருக்கிறாய்

ஒற்றை ஸ்பரிசத்தில்
ஓராயிரம் மின் கதிர்கள்
உயிருக்குள் விதைக்கிறாய்

ஓரவிழிப் பார்வையில்
மழை விட்ட மண் வாசம்
மனசுக்குள் பூசுகிறாய்

கோடையின் வெப்பமும்
காணாமற் போகிறது
காற்றாய் நீ அணைக்கிறாய்

கைகோர்த்து நடந்திடும்
சாலைகள் எல்லாமே
சொர்க்கமாய் உணர்த்துகிறாய்

பரிமாறும் உணவுடன்
பாசத்தை மிகுதியாய்
கலந்து கனிந்து தருகிறாய்

எனக்காக எல்லாமே
பார்த்துப் பார்த்துப் புரிகிறாய்
வாழ்வின் அர்த்தம் ஆகினாய்

கவலைகள் எதுவென்று
மறந்துமே போனது
மகிழ்வாக நீ இருக்கிறாய்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் எல்லை வரை

உனக்கும் எனக்குமான
புதிய அத்தியாயம் இது

அன்பிற்கான அகராதி
இங்கேதான் எழுதப்படுகிறது

வாழ்வின் எல்லை வரை
தொடரும் நம் மெய்யன்பு

முடிவில்லா வானம் போல்
நீளும் அன்பிற்கான தேடல்

கடலின் நீலம் போன்றே
காதலும் நம்மோடு கலந்திருக்கும்

உனக்குள் நானும்
எனக்குள் நீயும்
தொலைந்து போவோம்
ஆயுட் காலம் வரை

என் உணர்வோடு
உன் உணர்வை உருக்கி
புதுக் காதல் ஒன்று நெய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அன்பாலே
என்னைக் கரைத்து
உன் உயிருக்குள்
மெல்லப் பதித்துக் கொள்

துவண்டு வீழ்கையிலும்
தூயவளே எனைத் தாங்கிக்கொள்
கண்ணயர்ந்து தூங்கயிலும்
கண் திரைக்குள் ஏந்திக்கொள்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்வனின் காதலி

காதலைத் தினம் திருடிக் கொள்வேன்
கள்ளி உன் இதயத்திலே!

கவி நயத்தையும் களவாடிக் கொள்வேன்
கன்னி உந்தன் ஓரக்கண் அசைவிலே!

அலை பாயும் என் இளமையை மெல்ல
ஒழித்துக் கொண்டேன்
அழகு தளம்பும் உந்தன் இடையிலே!

ஆறுதலைத் தேடி அபகரித்துக் கொள்வேன்
ஆருயிரே உனதன்பு மடியிலே!

நீ உறங்கும் பொழுதுகள் தோறும்
விழித்த படி உன்னழகைப் பருகுவேன்
உனக்கு எப்போதும் தெரியாமலே!

உன் புன்னகை தெறிக்கும் இன்பங்ளையும்
கவர்வேன் முழுவதுமாய்
முன் அனுமதி பெறாமலே!

உன்னிடம் விண்ணப்பம் கோராமலே
ஆசை முத்தம் நித்தம் பதித்திடுவேன்
காதலியே உன் கள்வன் நானே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு ஒரு பறவை

என் மனவானை நிரப்பியிருக்கிறது
ஞாபகப் பறவையின் சிறகுகள்

என்(ண்) திசைகள் எங்கும்
உயர உயரப் பறக்கிறது அப்பறவை

இனிய நினைவுகளையும்
இளமைக் கனவுகளையும்
வடிந்துறைந்த கண்ணீரையும்
வண்ணங்களாக ஒட்டியிருக்கிறது
இறக்கைகள் முழுவதும்

எங்கோ? எப்பொழுதோ?
ஒரு தருணம் தேவைப்பட்டது
அப்பறவை வாசம் கொள்வதற்கு

இப்போது இதயங்களில் ஆழப்பதிந்த
அழியாத் தடங்களின் விம்பமாயிருக்கிறது

அவ்வப்போது என்னைத்
தொடர்ந்து கொண்டிருக்கிறது
ஒரு பயணியைப் போல்

தனிமையின் பொழுதுகளில்
துணையாகக் கூடவே வருகிறது
நீங்கா நிழலைப் போல்

வாழ்வின் எல்லைவரை
தடையற்றுத் தொடரட்டும்
ஞாபகப் பறவையின் சிறகசைப்புகள்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலின் உயிரோசை

நேசித்தலின்
புதிய அத்தியாயத்தைப்
புரட்டி விடுகிறாள் என் சகி

இமைகள் வலிக்காது
வாசித்துக் கொண்டே
என்னை மறந்தபடி நான்

இன்பத் தருணங்கள்
அவள் புன்னகைச் சாரலில்
உயிர்பெற்று விடுகின்றன

வாழ்வின் பேரின்பம்
அவள் சிணுங்கல்களுக்குள்
இழையோடிக் கிடக்கிறது

இராப் பகலாக விழித்தபடி
காதல் யாகம் நடத்துகிறது
எனக்குள் ஆறாம் அறிவு

எதிர்பார்பில்லாப் பாசம்
எதிர் பாரா இன்ப அதிர்ச்சி
எல்லாமே சாத்தியமாகிறது

என்னைச் சூழ்ந்து
சிறைப் படுத்திக் கொண்டது
உயர்ரகமான அவள் காதல்

உயிர் ராகம் மீட்டுகிறது
இப்போது என் ஆத்ம நேசம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளோடு

என் இரவுக்கும் ஒளியிருந்தது
முற்றத்தில் அழகிய நிலவிருந்தது

காற்றோடும் கதை பேசிடக்
கனவுகளுக்கும் இறகிருந்தது

என் இளமைப் பூங்காவில்
மழைக்கால மேகங்களின்
குளிர்மை நிறைந்திருந்தது

வசந்த காலத்து
வண்ணத்துப்பூச்சி போல்
எண்ணங்கள் தோறும்
வண்ணங்கள் நிரம்பியிருந்தது

எண்ணிப் பார்க்கிறேன்
எல்லாமே கானலாகிப் போனது

நினைவுகள் மட்டும் நெஞ்சோடு
ஒட்டிக் கொண்டிருக்கிறது

நொடிப் பொழுதுகளும் என்னை
வஞ்சித்துக் கொண்டிருக்கிறது

நிமிடங்கள் யுகங்களாகி
உயிரைக் குடித்துக் கொல்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளும் மரத்துப் போய்
வெறுமைகள் என்னை
மென்று தீர்த்துக் கொள்கிறது

செடியைப் பிரிந்த மலர்களுக்கெல்லாம்
சோகத்தின் முகவரி மலர்மாலை தான்

தனிமையின் மிகக் கொடூர வலி
உயிர்க்காதல் பிரிவைச் சுமப்பது தான்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தில் உறைந்திருக்கிறாய்

மாசி மாதக்
குளிர் பொழுதாய்
பார்வை வீசிக்
குளிர வைத்தாய்

பங்குனி மாத
உச்சி வெய்யிலாய்
கடந்து போகையில்
அனல் தெறித்தாய்

ஆழக்கடல் உப்பாக
உள்ளத்துள் ஆழமாக
நீ உறைந்தாய்

இதமாகும் தருணங்களால்
நினைவுகளில்
தேன் இறைத்தாய்

பஞ்சு மெத்தை
உறக்கத்தையே
மண் மேட்டில்
உணர வைத்தாய்

தேவதை உன்
பார்வை பட்டு
அத்தி மரமும் பூக்கிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவையே உன்
பாதம் தொட்டு
ஆற்று நீரும் இனிக்கிறதே

பூவையே உன் வரவால்
காய்கறித் தோட்டம்
பூந்தோட்டம் ஆகியதே

எட்ட ஒளிரும்
வட்ட நிலாவும்
எட்டி உன்னைத் தேடியதே

பக்கத்திலே
நீ இருந்தால்
வசந்தம் வீசும்
எந்தன் வாழ்க்கையடி

உள்ளத்திலே
உறைந்தவளே
உயிரோடு கலந்தவள் நீ!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக்காரி

ஐந்தடி நிலவொன்று
பூமியில் நடந்தது
மந்திரப் புன்னகை
மகிழ்ந்திடப் படர்ந்தது

மழைக்கால வானவில்
இவள் வண்ணம் ஆனது
அந்த ஏழு நிறத்தையும்
இவள் உரு வென்றது

குடை பிடித்துப் போனதால்
மழையும் விம்மி அழுதது
குடைக்குள்ளே மழை என
நீரோடை சல சலத்தது

கடற்கரை மணல் மேலே
முத்தொன்று நகர்ந்தது
இவள் பாதம் பட்டுத்தான்
அலை நுரையும் வெளுத்தது

வீசி வந்த தென்றலுக்கும்
காதல் ஆசை வந்தது
கன்னி இவளைச் சூடவே
பூக்களும் நித்தம் ஏங்குது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழலும் கவிதை பூக்கும்

விழியது வலையாகிப்
புன்னகை உயிர்வாங்கச்
சூழ்நிலை தடுமாறிப்
பூங்கொடி வசமானேன்

என்னிலை எதுவென்று
புரியாது தடுமாறி
விண்ணிலே மிதக்கின்ற
அஃறிணைப் பொருளானேன்

ஐயகோ! அழகென்றால்
மெல்லிடை நடையன்றோ?
நோகாமல் அறுக்கின்ற
பார்வைகள் கொலைவாளோ?

பெண்மையின் அசைவுகள்
வாலிபச் சிறைதானோ?
விடுதலை விரும்பாத
கைதியாய் உளமேனோ?

மௌனமும் மொழியாகி
எழிலாட வதனத்தில்
அவளுதடுகள் உதிர்க்கின்ற
வார்த்தைகள் இசைக்கோர்வை

காதலின் போதைகள்
பேதையின் நினைவிலே
கவிதைகள் பூத்திடும்
தேவதை நிழலிலே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவளே!

என் விழிகளும் மொழிகளும்
யாசிக்கும் வருங்கால வசந்தமே
ஏக்கங்கள் சுமக்கும் ஏகாந்தம்
இனி உன்னோடு பயணப்படும்

என் நாழிகை எல்லாம்
உனதன்பில் எழில் சூழும்
என் வாழ் நாள்களும் அவை
உன்னாலே பொருள் மேவும்

வீழ்ச்சிகளில் எழுச்சிகளும்
ஓயாமல் நடை போடும்
உன் துணை கண்டு தானே
என் துயரங்கள் தொலைவாகும்

வாழ்வின் மகிழ்ச்சிகள்
கருக்கொள்ளும் என் காதலே
ஊடலும் கூடலும் ஒருபோதும்
உனையன்றி அணுகூட நகராது

விடிகாலைப் பொழுதுகளும்
அந்தி மாலை மயக்கங்களும்
இறக்கைக்குள் குஞ்சுகளாய்
உன்னோடு ஒட்டிக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலாய்த் தாலாட்டும்
உனக்கான என் பொழுதுகள்
திங்களாய் மகிழ்வூட்டும்
உறங்காத என் இரவுகள்

விரல் மீட்டும் வீணையாகி
இசை மீட்டும் உனதருகாமை
இனிமைகளின் பிரசவிப்பும்
சிறு சீண்டலிலும் தினம் நிகழும்

என் ஒற்றையடிச் சாலைகளில்
இனி இரட்டைத் தடங்கள் பூப்பூக்கும்
பாலை வனமான பயணங்களில்
பசுமை மிகு நந்தவனம் பேசும்

முட்களும் கற்களும் பல
முட்டி மோதிய என் இதயத்தில்
பூவொன்று இனி மெல்ல
நித்தியம் வருடிப் போகும்

மழை வானில் கதிரவனும்
மடி துயில வெண்ணிலவும்
கோடை கால வானவில்லும்
இவன் வாழ்வை அலங்கரிக்கும்

காவியங்களும் காப்பியங்களும்
காணாத காதலொன்று கண்கூடும்
இதிகாசங்கள் இலக்கியங்கள்
தவற விட்ட அன்பிங்கே மீட்கப்படும்

காலம் எனக்கானவளை
காட்டித் தந்திருக்கிறது நன்று
நான் அவளுக்கான என்னை
ஒப்படைத்திருக்கிறேன் இன்று.

(25.10.2018)

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய காதலே

உன்னை வாழ்த்தப்
பூக்களைத் தேடினேன்
பூந்தோட்டமே நீயென்று
திரும்பினேன்

அர்ச்சனைக்காய்
ஆலயம் நாடினேன்
தெய்வீகப் பெண்
நீயென்று நீங்கினேன்

கடைத் தெருவில்
பரிசுகள் வாங்கினேன்
உன் பரிசு நானென்று
கருதினேன்

தமிழுக்குள்
வார்த்தைகள் தேடினேன்
உன் நாமம் கவியென்று
பாடினேன்

உன் நிழலாகி
நானென்றும் தொடருவேன்
துயர் தீர்த்துத் துணையாக
வாழுவேன்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றை மரக்கிளை

இந்த மாலை ஒன்றும்
மனம் வருடியதாயில்லை

இள மஞ்சள் வெயிலும்
மயக்கி மாயம் நிகழ்த்திடவில்லை

இந்தத் தென்றலும்
மேனிக்குக் குளிர் சேர்த்திடவில்லை

இந்த வானும்
நிறம் வெளுத்துப்போயிருக்கிறது

அங்கே மேகக்கூட்டமும்
பொருளற்றே பயணப்படுகிறது

ஒற்றை மரக்கிளையில்
ஒரு பறவை மட்டுமேனோ
தனித்திருப்பதாய் தென்படுகிறது

எல்லாமே என் ரசனைக்கு
அப்பாற் சென்று கொண்டிருக்க,
அந்த இந்தத் தனிமை மட்டுமே
இப்போது அழகு போர்த்தியிருக்கிறது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுத்தாளின் ஆதிக்கம்

பணம் கொண்டு விலை பேசும்
பரிதாப உலகமே
மனம் ஒன்று இருப்பதை
மறந்ததே மனிதமே

புனிதர்கள் பாதங்கள்
பதிந்திட்ட மண்ணிலே
கருணைகள் உருக்கொள்ள
மறுப்பதேன் கண்ணிலே

உனக்கொன்று பிறர்க்கொன்று
நீதியை வகுக்கிறாய்
நீ வாழப் பிறர் வாழ்வைத்
தயங்காமல் கெடுக்கிறாய்

பொதுநலப் போர்வைக்குள்
சுயநலம் வளர்க்கிறாய்
பிறப்பிற்குப் பொருளற்று
இருக்கையில் இறக்கிறாய்

பணம் சேர்க்க ஓடியே
வாழ்வினைத் தொலைக்கிறாய்
பணம் தானே இறையென்று
இறுமாப்பில் அலைகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு மீறிய
பணம் கூடப் பாவமே
பசி போக்க உதவிடா
மனிதர்கள் சாபமே

பணத்தின் கண் வாழ்ந்திடும்
வாழ்வது அற்பமே
மனிதத்தை நேசித்தால்
வாழ்க்கை பெருஞ்சிற்பமே

இல்லார்க்கு உதவிடல்
அறங்களில் உச்சமே
உலகுக்கு உய்வுண்டேல்
அன்பினால் மட்டுமே!

●

(உதயன் 14.03.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடியிடை சிற்பம் நீ

மல்லிகை நறுமண
மேனி கொள் பூவையே!
வெட்டுகின்ற மின்னலை
விழி சுமக்கும் பாவையே!

செம்பருத்தி பூ நிற
உதட்டுடை நங்கையே!
சந்திரப் பிறை பதித்த
நெற்றி கொண்ட தேவியே!

காரிருள் சாமத்தில்
வழி தொலைத்த வேடனாய்
நின் கூந்தலில் சிக்கியே
திணறிப்போனதுண்டு நான்!

அந்தரத்தில் மிதந்திடும்
முச்சறுந்த பட்டம் போல்
பார்வை பட்ட நொடியெலாம்
பாவி நானும் தவிக்கிறேன்!

நெளிவு வளைவு சுழிவென
கொடியிடை சிற்பம் நீ
ஆஸ்கார் விருது ஆசையில்
பிரம்மா உனை வடித்தானோ?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுமையாகிறேன்

என் இருப்புகள்
வெற்றிடமாகிக் கொண்டிருக்கின்றன

உன் நினைவுகளில்
என் ஆன்மா தீர்ந்து போகிறது

ஏதோ ஒன்றிடம்
உணர்வுகள் வலிந்து
நொந்து சோர்கிறது

உள் மனதில்
உருவமில்லாக் கனதி ஒன்று
வலிந்து உருக்கொள்கிறது

பயணங்களில் உண்டாகும்
இன்பக் கணங்கள் இன்று
வேதனைகளில்
வெந்துகொண்டிருக்கின்றன

எந்தவொரு மகிழ்ச்சியின்
தடையமும் இப்போது
தனிமையின் பால் வறட்சியாகவே
வெறுமைப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலுக்கும் பூவுக்கும்
இடையேயான நெருக்கங்கள்
இப்போது நெருப்பையே
பந்தாடுகின்றன

பார்வைத் தருணங்கள்
நெஞ்சில் கருக்கொண்டு
மரண வலியையே பிரசவிக்கின்றன

வேதனையின் உச்சமாகவே
இந்தச் சிறு பயணம் மாறிவிடுகின்றது
குறுகிய காலப் பிரிவுகள் கூட
மெய்க்காதலில் கொடிய ரணங்கள் தான்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியம் ஒன்று வரைந்தாக வேண்டும்

எனக்குள் நிறைந்து விட்டாள்
அந்த ஓவியப் பாவை

என் கண் முன்னே ஒளியாகவும்
உதட்டு வழி வார்த்தையாகவும்
எண்ணங்களின் முழுமையாகவும்
இப்போது வெளிப்படுகிறாள்

என் உயிர்த்தூரிகை பிரியப்படுகிறது
அவள் உருவத்தை
இப்போதே வரைந்தாக வேண்டும்

உணர்வுகளின் மை கொண்டு
அவள் உருவத்தை
முழுமைப் படுத்த வேண்டும்

காதல் ரசனைகளால்
மேலும் எழில் சேர்க்க வேண்டும்

காதற் செடியாய்
எனக்குள் துளிர்விட்டவள்
சில தருணத்தில்
இவன் ஆசைச் செடி வளர
அன்பு நீர் இறைத்தவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்ட நின்று
நினைவுகளால் கட்டிப் போட்டவள்
என் நினைவுகளைக் கட்டி ஆழ்பவள்

வரைந்தே ஆக வேண்டும்
என் காதலின் ஓவியப் பதுமை அவள்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சுக்குள்ளே உன் நினைவு

தை மாச முதல் நாளில்
தரிசனத்தைத் தந்தவளே
பொங்க வச்ச பானை போல
கண்ணு முன்னே நின்றவளே

மாசி மாசக் கொடும் பனியா
மனசை உறைய வைத்தவளே
பங்குனியின் வெப்பத்திலும்
உள்ளத்திலே குளிர்ந்தவளே

சித்திரைப் புத்தாண்டில்
சம்மதத்தைச் சொன்னவளே
வைகாசி விசாகத்தில்
கரம் கோர்த்து நடந்தவளே

ஆனி மாச இரவெல்லாம்
தவிதவித்தேனே நினைவுகளில்
ஆடிப் பிறப்புக் கூழ் கொடுத்து
அடி மனதில் அமர்ந்தவளே

ஆவணியின் பெருந்துயராய்
ஊடல் கொண்டு பறந்தாயே
புரட்டாதியும் வாட்டுதடி
வந்து என்னைச் சேர்ந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசியில் பெய்த மழை
மண்ணில் கலந்து போனதுவே
கார்த்திகையில் உதித்தவளே
என்னில் கலப்பது எப்போது?

மார்கழியும் கார்முகிலும்
நம்மை எண்ணிக் கலங்குதடி
நெஞ்சுக்குள்ளே உன் நினைவு
நெரிஞ்சி முள்ளாய்க் குத்துதடி!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலாடையாய் நிலா

நிசப்த நீட்சியில்
நீங்காத நினைவுகள்

உருகும் பனியில்
உறங்காத கனவுகள்

தனிமையான தருணத்தில்
தாலாட்டும் தென்றல்

ஞாபகங்கள் பூத்திருக்கும்
நட்சத்திர வானம்

இனிய இரவினிலே
மேலாடையாய் நிலா

அவளைத் தவிர
அத்தனையும் அருகினிலே!

●

(தினகரன் 09.02.2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பிற்கு ஆண்டொன்று

இருள்மிகு நாழிகை
ஒளியது மேவிட
புலர் காலைப்
பொழுதாக வந்தாயே!

தளர்கையில் தாங்கியும்
அயர்கையில் சாய்ந்திட
தாரமாய் நின்மடி தந்தாயே!

ஊடலின் இடைவெளி
கூடலில் தீர்ந்திட
நேசத்தில்
அர்த்தங்கள் செய்தாயே !

பெருங் கடல் போன்றொரு
பேரன்பின் நிறைவினை
மொத்தமாய்
என்னிடம் சேர்த்தாயே!

ஆண்டொன்று அழகுற
அன்போடு நகர்ந்திட
இன்பத்தால் வாழ்வதை நெய்தாயே!

●

(30.03.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவியின் மொழி

இதமான காற்று வீசும்
முன்மதியப் பொழுதொன்றில்
நிழல் கொள் முற்றத்தில் - நானும்
மரக்கிளையில் அதுவும்

இயற்கையின் எழிலையே
தன் குட்டிச் சிறகுகளில்
இறுகக் கட்டிப்போட்டிருந்தது

பச்சை இலைகளுக்குள்
பவளத்தை ஒளித்தாற் போல்
பிரகாச ஒளி வீசியது

பருவப் பெண்ணின்
நயனங்களின் பிரதிபலிப்பு
நிலம் பார்க்கும் அதன் அசைவு

நாழிகையே ஒளி கொண்டது
அதன் ஒலி கேட்கையில்
ஒலியின் மொழியெதுவோ
வினாக்கள் விடைதேடியது

இயற்கையின் புகழ் கூறும்
மகிழ்ச்சிப் பாடலொன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியோடு இணைந்துருகும்
துயரத்தின் முன்மொழிவோ?

காதலது கைகூட
வேதனையின் சில வரியோ?

தன்னிணையைப் பிரிந்திருக்கும்
தவிப்புக்களின் ஆராதனையோ?

மனிதரிடம் அனைத்துயிர்க்கும்
சமத்துவம் கோரும் ஒலியோ?

உலக சாமாதானம்
வேண்டியதோர் பிரார்த்தனையோ?

விடையற்ற வினாக்கள் தந்து
விடைபெற்றது அப்பட்சி
இறுதிவரை புரியவில்லை
இருந்தும் மனம் நகரவில்லை

அன்றாடம் மானிடர்கள்
எனைக் கடந்து போனாலும்
மீண்டுமொரு குருவிக்காய்
காத்திருக்கிறேன் மொழி கடந்து.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவின் கொடுந்தீ

விடியாத பொழுதுகளே
பெரும் பொழுதென்றாக
கண்ணீர் நிறை உலகொன்று
உறக்கமற்று இருள்கிறது

அழியாத சுவடுகளால்
நினைவுகள் படர்ந்த காட்டில்
அந்தரித்த ஆன்மாவின்
அவலக் குரல் ஒலிக்கிறது

ஒளியிழந்த பெருங்குழியில்
சிறகொடிந்த ஒரு பறவை
துயரக் கொடுஞ் சிறையில்
கைதியாகித் தவிக்கிறது

நாழிகையின் நீட்சிகளும்
வேதனையின் சாட்சிகளாய்
தனிமையின் பெரு வெளிகள்
நிசப்தத்தை உணர்கிறது

நீயில்லாத் தருணங்களின்
என் நிழலே எனை வெறுக்க
ஒளியற்ற வெறுமைக்குள்ளே
என் நாள்கள் கழிகிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலைபாயும் மனது

பற்றிப் பற்றி எரிகிறது
பதின்மப் பருவ வயது
சுற்றிச் சுற்றி வருகிறது
சுகமாக ஒரு நினைவு

கால நேரம் புரியவில்லை
காண்கிறேன் பல கனவு
காலை மாலை என்வானில்
ஓயாமல் ஒளிரும் நிலவு

திகட்டாத அவள் அழகில்
தித்திக்கும் என் பொழுது
தெவிட்டாத சங்கீத ராகம்
இசைக்கும் என் இரவு

காற்றலையில் மிதக்கிறது
கடிவாளமிடா உணர்வு
காதல் கானம் படிக்கிறது
தன்னிச்சையாய் என் உதடு

அவளாலே அங்க மெலாம்
அளவில்லாத மகிழ்வு
எல்லாமே எழில் கொள்ள
அலைபாய்கிறது மனது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிவழி தொலைதல்

பிரியங்களுக்கே உண்டான
தனித்துவத்தை விழிகளால்
நிரப்பிக்கொண்டிருக்கிறாய்

இமைக்கா நொடிகளை
உயிர்ப்பித்த தருணத்தில்
நான் உனக்குள் தொலைகிறேன்

சிறு தீண்டலினாலோ
சில வார்த்தைகளாலோ
ஆரத் தழுவலினாலோ
மென் புன்னகையாலோ
நிகழ்த்தப்படாத ஒரு பேரன்பு

காற்றிடை வெளியில்
விழிவழியே உணர்வு கடந்து
ஆத்மார்த்தம் கொள்கிறது

காதல் கடிதங்கள் பேசா மொழி
காதல் கவிதைகள் எட்டா உணர்வு
காதல் முத்தங்கள் தராத ஈர்ப்பு
காதல் பரிசுகளால் நேராத பிரமிப்பு

எனதும் உனதும்
விழிகளுக்கிடையே நிகழும்
இப் பார்வைகளால் மட்டும்
அவதாரம் கொள்கிறது காதல்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமைதிக்கான வெற்றிடம்

மரணத்தின் விளிம்பிலே
ஊசலாடிக்கொண்டிருக்கும்
உணர்வுகளின் மீட்சிக்காகவும்

துரோகத்தினால் அறுக்கப்பட்ட
ஆன்மாவின் ஆறாத்துயர்
சற்றேனும் மரித்துப் போகவும்
மெய் மறந்த கனவுகள் வழியே
ஆழ்மனம் ஆறுதல் கொள்ளவேனும்

வற்றிப்போன கண்ணீராற்றின்
கரைகள் மெல்லக் கசிந்தீரம்
கொள்வதற்கேனும்

அவசரமாகப் பேரமைதி ஒன்று
தேவையாக இருக்கிறது!

அது பெரும் புறக்கணிப்பின் பின்னரான
சிறு சாந்தப்படுத்தலாகவிருக்கலாம்

நிஜங்களைச் சூறையாடிய
துயரக் கணங்களைச் சற்று
மறந்திடவேனும் வாய்ப்பினை வழங்கலாம்

ஏமாற்றங்களின் ஒட்டுமொத்த வலிகளைக்கூட
சில பொழுதேனும் தூரம் தள்ளி வைக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைகள் அறுந்துகிடக்கும்
மானிடத் தெருவினிலே
சற்றுநேரம் அசந்துறக்கம் கொள்ளவேனும்

அவசரமாகப் பேரமைதி ஒன்று
தேவையாக இருக்கிறது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மீகா

ஆத்மீகா
ஓர் உண்மை அறிவாயா?

இவ்வையம் உண்மையைப்
போர்த்தியிருக்கும் ஒரு பொய்

இங்கே நடப்பவை பறப்பவை
மிதப்பவை ஊர்பவை யாவும்
பொய்களால் உருப்பெற்றவை

நீ உண்மையெனக் கருதுபவை
எல்லாமே மாயத் தோற்றங்கள்

இவ் வாழ்வியல் பொய்களால்
நிரப்பப்பட்டிருக்கிறது

நீயும் நானும்
யாவுமிங்கே பொய்த்தோற்றம்

அறிவு ஆற்றல் எல்லாமே
போலிகளின் பிம்பங்கள்

மறு பிறப்பும் இன்னோர் உலகும்
நம்மைத் தேற்றுவதற்கான
பொய்க்கூற்றுக்கள் ஆத்மீகா

ஆக, இக்கணம் இத்தருணம்
வாழ்தல் ஒன்றே
உண்மையென்று காண் ஆத்மீகா!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதோடு மழைக்காலம்

என் மனவெளிக்குள்
தண்மையை நிரப்புகிறேன்
இந்தக் கருமுகிலைப் போல்

காரிருள் கூட்டுச் சேர்ந்து
அலங்கரித்த மேகமோ
வார்த்தைத் துளிகளைச்
சேமித்து வைத்திருக்கிறது

என்னைப் போலவே தான்
வானமும் தன் காதல் நிலத்திடம்
எண்ணங்களைக் கொட்டித்
தீர்ப்பதற்கு காத்திருக்கிறது

முன் அனுமதி பெறாமலே
மேனி வருடிச் செல்கிறது
சில ஞாபகங்களைப் போலவே
இந்த மாலை இளந்தென்றல்

குளிரில் நனைந்துலர்ந்து
காற்றில் மிதந்து போகின்ற
அவ்விரு பட்சிகளைப் போலவே
அந்தரத்தில் மிதக்கின்றன
அவளோடான என் எண்ணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை உதிர்ந்த மரமாகியும்
நம்பிக்கை வேர் பற்றியிருக்கும்
விருட்சமாக எதிர்பார்த்திருக்கிறேன்
அவளின் காதல் மழைக்காக

யாரறிவார் இந்த முகில்கள்
மழையாகுமா? அல்லது
காற்றோடு கலைந்து விடுமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் சூழ் நினைவு

துர் நெடு வனாந்தரத்தில்
நிர்க்கதியாகியிருக்கும்
என் ஆத்மார்த்த பிரியத்தின்
சிறகுகள் உடைக்கப்படுகின்றன

அமிலம் பருகி ஏப்பமிடும்
ஒளி விழுங்கிய கணமொன்றில்
ஆழ நேசிப்பின் சுவடுகளை
செல்லரித்துக் கொண்டிருக்கிறது

வற்றி வரண்டு கிடக்கும்
ஈரமற்ற ஆற்று மேட்டில்
இறுதித் தருணத்தின் விளிம்பில்
உணர்வற்றுக் கிடக்கும் மீனாக
இந்தப் பாசம் பரிதவிக்கிறது

விடத்தை விழுங்கிய நாட்களும்
நஞ்சை உமிழும் பொழுதுகளும்
நொடிகள் தோறும் உயிரை அறுத்து
வன்மம் கொண்டே கடக்கின்றன

இப் பிரபஞ்சமே எனக்கெதிராய்
வஞ்சித்துக்கொண்டிருக்கிறது
ஆதரவற்று ஆசுவாசமற்று ஆத்மா
அந்தரித்துக் கொண்டிருக்கிறது

இப்போதும்,
புரிதலற்று போன அந்தப் பிரிவின்
இருள் சூழ் நினைவுகளுடனேயே
இவ்வுயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

●

(உதயன் 21.07.2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் முத்தம்

முத்தம்
பிரியத்தின் முத்திரை
யாசிப்பின் ஒத்திகை

கூடலின் திறவுகோல்
ஊடலின் முற்றுப்புள்ளி

காதலின் பசி தீர்க்கும்
மூவேளை தாண்டிய
எவ்வேளைக்குமான உணவு

அன்பின் இடைவெளியும்
அதீத நெருக்கமும்
முத்தத்தை சார்ந்திருக்கும்

முத்தங்களே
உணர்வுகளுக்குச் சத்து

ஊடல்களின் போதான
சிறு விரிசல்களையும்
கூடலின் தாப முத்தங்கள்
சீர் செய்து விடுகிறது

தூய்மையான முத்தங்கள்
என்றும் புனிதமானவை
முறை தவறிய முத்தங்கள்
அசுத்தமானவை

முத்தங்கள் எப்போதும்
புனிதத்தைப் பேணட்டும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌனப் பெரு விசும்பல்

சபிக்கப்பட்ட இரவொன்றில்
சலனங்களின் கைதியாகி
பயணப்பட்டிருக்கும் ஆன்மா

திசைகளைத் தின்ற
பாலைவன வெளிகளுக்குள்
தாகத்தை சுமந்திருக்கும் நா

ஆற்றொணாத் துயர் சுமந்து
விம்மி விம்மி உடைந்து வீழும்
விழியாற்றின் கண்ணீர்த்துகள்கள்

ஏமாற்ற மிகுதியின் பால்
நிஜங்களைத் தேடி அலைந்து
விக்கித்து நிற்கும் உணர்வின் விசும்பல்

பேரமைதிக்குப் பின்னும்
இன்னும் மீளவேயில்லை
வலியில் அகப்பட்ட என் உள்ளக்கிடக்கை!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலோடு கலத்தல்

இதே போன்றதொரு
நாழிகையில்
நீண்டு கடந்த
கால வெளி நடுவில்

இதே சூரியனும்
இதே சந்திரனும்
அண்ட வெளியில்
உலா வந்துகொண்டிருக்கும்

அவ்வாறே உன்னோடான
எனது நேசிப்பும்
தொடர்ந்துகொண்டிருக்கும்

விரைந்து செல்கின்ற
காலக் குதிரை
விதியின் பாதை வழி
பயணப்பட்டிருக்கும்

உருவங்களில் மாற்றம்
ஏராளம் நிகழ்ந்திருக்கும்
உள்ளத்தில் மாற்றம்
சிறிதேனும் இருக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரை விழுந்த முடி
கன்னங்களில் சுருக்கம்
தளர்ந்த பேச்சு
மங்கிய பார்வை
தள்ளாடும் நடை
வயோதிபத்தின் நகர்வு

ஆனபோதும்,
புன்னகையில் போலியிருக்காது
அன்பில் சிறு குறையுமிருக்காது

ஆம், இந்த முத்தங்களும்
அப்போதும் ஓயாமல் நிகழும்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியங்களுக்கு உருவமில்லை

திணிக்கப்படுவதோ
நிர்ப்பந்திக்கப்படுவதோ
பிரியங்களாவதில்லை
உணர்வுகளின்
உட்பொருளானது அது

அதனை வார்த்தைகளோ
வியாக்கியானங்களோ
முழுமை செய்வதுமில்லை

இரு மனங்கள் ஒன்றான
பார்வையினாலோ
தொடுகையினாலோ
அணைப்பினாலோ

தோள் சாய்தலினாலோ
கண்ணீரினாலோ - ஏன்
ஒரு முத்தத்தினால்க் கூட
உணர்த்திவிடலாம்

சகியே இப்போது சொல்
என் பிரியத்தை எப்படி உணர்த்த?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் தேவி

சூடான
ஒரு கோப்பை தேநீர்
சுவீகரித்திருக்கிறது
இந்தக் குளிர் பொழுதை

கரு மேகம் சூழ்ந்த
மழைக்கால வெளி

விரைகின்ற தொடருந்தில்
கூதல் கூட்டும் காற்று

அதே பாதை
அதே பயணம்
சன்னலோர இருக்கை
அருகில் என்னவள்

அழகிய கவிதைகள்
இனிய பாடல்கள்
குறைவில்லா கலகலப்புக்கள்
பயணத்தின் இடை நடுவே
மீண்டும் ஒரு கோப்பை தேநீர்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருங்காட்டு நேசம்

பசுமைக் காலத்து
மரக்கிளையை விட்டுப்
பிரிந்திருக்கிறது ஓர் இலை

இலை கிளையோடிருந்த
நாள்கள் பவித்திரமானவை

காலை பனித்துளியும்
பகலவன் கதிரொளியும்
மாலை வான் மகளின்
மஞ்சள் தெளிப்பும்

பறவைகள் கொஞ்சலும்
பிராணிகள் கெஞ்சலும்
பரிபூரணம் நிறைந்தவை

வெயிலோடு மோதலும்
மழையோடு கூதலும்
காற்றோடு ஊடலும்
பேரன்பின் தருணங்கள்

தளிரோடும் சக இலையோடும்
பூவோடும் காய் கனியோடும்
உறவு வளர்த்த நாழிகை
பேரின்பம் மிகுந்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதான இந்த நிகழ்தல் என்பது,

மண் மீதான பிரியத்தின்
உயர்ந்த பட்ச
வெளிப்பாடாயிருக்கலாம்

தன் காதலை நிரூபிக்க
வேறு வழியின்றித்
தன்னையே மாய்த்திருக்கலாம்

பிராணி ஒன்றின் பசி தீர்க்கத்
தியாகம் புரிந்திருக்கலாம்

பறவை ஒன்றின் சிறகசைப்பின்
பாதிப்பாயிருக்கலாம்

அல்லது சூழ்ச்சியோ?
சிறு ஏமாற்றமோ? பெருந்துரோகமோ?
நிகழ்த்தப்பட்டிருக்கலாம்

எது எப்படியோ
ஒரு பிரிதலுக்குள்
பெருங்காட்டு நேசம்
நிச்சயம் புதையுண்டிருக்கும்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகு முளைத்த புலர்வு

இளவேனிற் காலத்து
மெல்லிய கூதலோடு
விடிகின்ற இளங்காலை

சாளரத்தின் வெளிவழியே
ஒளியோடும் காற்றோடும்
விளையாடும் சிறு தூறல்

கைபேசிக் காணொளியில்
கம்பீரத் தமிழ் பாடும்
வைரமுத்து குரல் கவிதை

அன்பின் நெருக்கத்தில்
இடைவெளியற்றுப் போகும்
என்னவளின் அருகாமை

இரவுக்கும் பகலுக்கும்
இடைப்பட்ட நாழிகையில்
மயக்கத்தில் அதிகாலை

இளஞ்சூடான தேநீரில்
சுவை நீளும் தருணத்தில்
இனிதானதோர் ஆரம்பம்

இன்பங்கள் துளிர்க்கின்ற
இந்தப் புலர்வுக்கு மட்டும்
சிறகு முளைத்திருக்கிறது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிட்டதிகாரம்

பிட்டுக்கு மண் சுமந்தார்
எங்கள் சிவனார் - யார்தான்
பிட்டுண்ணும் மகிழ்நாளை
வாழ்நாளில் மறப்பார்!

தேங்காய்ப் பூ கலந்த பிட்டு
பனங்கட்டியும் சேர்த்து - துண்டு
மாம்பழமும் பிசைந்துண்ண
அமிர்தம் தோற்கும் பாரு!

வெள்ளை மா பிட்டு ருசி
அறியாதார் யார் - இங்கு
வறுத்தமாப் பிட்டின் மணம்
நுகராதோர் எவர் உண்டு!

மண் சட்டிப் பழங்கறிக்குள்
பிட்டைப் பிரட்டிப் போட்டு
குடும்பமே சேர்ந்து காலை
உண்டு மகிழ்வோம் கேளு!

சம்பலுக்கோ பொரியலுக்கோ
பாற் சொதிக்கோ - பிட்டு
எக்கறிக்கும் முக்கனிக்கும்
சுவை நிறைக்கும் கட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிப் பிரட்டல் பருப்புக்கறி
முட்டை இறால் பொரியல் - அட
மீன் குழம்பு இறைச்சிக்கறி
சேர்க்கப் பிட்டு வேற (லேவல்)ரகம்!

சிறியவரும் மகிழ்ந்துண்ண
சிறப்புணவு பிட்டு - தினம்
பெரியவரும் விரும்பியுண்ண
இலகுணவு பிட்டு!

உணவாகி உணர்வோடு
கலந்த நாமம் பிட்டு - எந்தப்
பீட்ஷா, பேகரும் நிக்காது
அதன் அருஞ்சுவையைத் தொட்டு!

குழற் பிட்டு பாற் பிட்டு
ஒடியற் பிட்டு குரக்கன் பிட்டு - அரிசி
மாப்பிட்டு கீரைப் பிட்டு
சுறாப் பிட்டு கோதம்பமாப் பிட்டு!

●

(22.11.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு வேண்டும்

பிரிவு வேண்டும்
கட்டாயம்
பிரிந்தே ஆக வேண்டும்

தாயை
தந்தையை
சேயை
சகோதரரை
தோழரை
காதலை
துணையை
உறவுகளை

இவர்களில்
ஒருவரையோ
சிலரையோ
அனைவரையுமோ
சில காலம்
கட்டாயம் பிரிய வேண்டும்

அன்பு புரியவும்
அருமை மேன்மை தெரியவும்

தவிப்பு நிகழவும்
அர்ப்பணிப்பு ஆசுவாசம் உணரவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்திய நிகழ்த்தப்பட்ட
புறக்கணிப்பின் துரோகத்தின்
உண்மை நிலை தெளியவும்

ஆம்
பிரிவுக்குதான் அன்பை உணரும்
ஆத்ம சக்தி பல மடங்கு அதிகம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேலையுடுத்திய தங்கரதம்

முகில்களற்ற வான் வெளியாகத்
தெளிந்து கிடந்த வெற்று நாள்களை
நட்சத்திரங்கள் சூடி அழகு சேர்த்தது
அவள் நாணத்தில் உதித்த குறுநகை

வறட்சியில் வாடித் தளர்ந்த பயிர்களின்
பெருந்துயர் தீர்த்ததொரு கார்முகிலாய்
எந்தன் தவிப்பினை நிவர்த்தித்ததந்தப்
பேரொளியாள் ஓரவிழிப் பார்வை

அந்தி சாய்கையில் செந்நிற மேற்கை
அள்ளி அப்பிய வதனத்தைச் சூடியே
என் செடிகளற்ற தெருவை யெல்லாம்
தினம் தினம் பூக்களாக்கிப் போகிறாள்

இவ் ஊரடங்கு காலத்திற் கூடத்
திருவிழா நாட்களையே நினைவில் ஏற்றுகிறாள்
அவள் சேலை உடுத்திய தங்கரதமென
இன்று பதிவுசெய்த முகநூற் பதிவில்!

●

(04.12.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன்பின் படிமங்கள்

புலரும் பொழுதொன்றில்
காதோரம் தவழ்ந்து வரும்
குயில் பாடல் போலவும்

கோடைப் புளுக்கத்தில்
கொட்டித் தீர்த்ததொரு
மழை வானம் போலவும்

அந்தி சிவக்கையில்
தேகம் வருடிச் செல்லும்
ஆழிக்கரைக் காற்றாகவும்

உறக்கம் தொலைத்தவொரு
பின்னிரவை நிரப்புகின்ற
சுகமான ராஜ கீதமாகவும்

பொழியும் நிலவொளியில்
பாட்டி ரசித்துக் கூறும்
தேவதைக் கதையாகவும்

பெரு மழையின் சிறு
இடை வெளியில் இதமாகும்
மிதமான சுடு தேநீராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிச்சிறுமி பாதுகாக்கும்
பாடப்புத்தக நடுப்பக்க
அழகிய மயிலிறகாகவும்

அனுதினமும் எனக்குள்ளே
ஆர்ப்பரித்து எழுகின்றன
உன் பேரன்பின் படிமங்கள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையின் பாடல்

அடை மழையொன்று
இடைவிடாது பாடுகிறது
புரியாத ராகத்தில்

மண் மேட்டிலும்
புல் வெளியிலும்
நேசப் பெரு வெள்ளம்

ஆறுகள் குளங்கள்
கடல்கள் எல்லாம்
நிறை மகிழ்ச்சிக் கோலங்கள்

நீராடும் சாலைகளில்
மழைக்கால ஓவியங்கள்

புன்னகை எழிலாடும்
சிறு செடியின் சிற்றிலைகளில்
நீர் வண்ணச் சிதறல்கள்

பெரும் தருவொன்று
உயிர்ப் பிடிப்பைத்
தளரவிட்டுக் கொண்டிருக்கிறது

மாடி வீட்டின் சாளரம் வழியே
தேநீரை சுவைத்துக் கொண்டு
அழகு மழையை
ரசிக்கிறான் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைக் குடிசைக்குள்
கூரை வழி ஒழுகும் மழையை
வெற்றுத் தேநீர்க் குவளைகளுக்குள்
ஏந்திக் கொண்டிருக்கிறாள் ஒருத்தி

இப்போது கூறுங்கள்
இந்த மழை
என்ன ராகத்தில் பாடுகிறது?

●

18.11.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீளும் பெருந்துயர்

தெருக்களைச் சூறையாடி
வீட்டுக்குள் குடிபுகுந்து
வெள்ளக் காடொன்று
அலங்கோலமாய் நகர்கிறது!

வேரோடு தலை சாய்த்து
கிளைகளை உருக்குலைத்து
தருக்களின் உயிர் குடித்துப்
பேரவலம் நகர்கிறது!

சிற்றுயிர்கள் இருப்பிடங்கள்
மற்றும் பல நற்பயிர்கள்
சிதைந்து போகும் நர்த்தனத்தை
அரங்கேற்றி நகர்கிறது!

வாழ்விடத்தை சீரழித்து
ஏழ்மையினை விதைத்து விட்டு
இரக்கமற்ற பகைவனைப் போல்
இறுமாப்பில் நகர்கிறது!

எளியவரின் அவலங்களைக்
கண்டு கொள்ளா அதிகாரமாய்
சுயநலத்தின் அரசியல் போல்
சூட்சுமமாய் நகர்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுயர் விஞ்ஞானமும்
மிகையான தொழிநுட்பமும்
அத்தனையும் அற்பமென்று
இயற்கையுணர்த்தி நகர்கிறது!

அடை மழையும் கடுங்குளிரும்
அகோரப் புயலும் ஒன்று சேர
அனர்த்தத்தை நிகழ்த்திவிட்டு
காற்றிலேறிப் புரேவி நகர்கிறது!

●

03.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிதலின் உயிர்ப்பு

மண் உறைந்த மழைத்துளியில்
விண் பிரிந்த ஆறாத்துயர்

வான் முகிலின் கலைதலுக்குள்
இருப்பிடத்தைத் தொலைத்த வலி

அன்னிய தேசம் பறக்குமந்தப்
பறவையின் விழியில்
அதன் தாய்த்தேசத்தின் வாசம்

வேற்றுலகினைக் கண்டடைந்தாலும்
உதித்த மண் நீங்காது
உயிர் கொண்ட பாடல்

அருகிருப்பதில் வெளிப்படா
நேசங்களும்
தொலைவிருப்பதில் பெரும் சுமையாய்
ஏக்கங்களும்
இணைந்திருப்பதில் அலட்சியமாய்
உணர்தல்களும்

பிரிதலில் தான் நிகழ்கிறது
புரிதலின் உயிர்ப்பு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா கொடுந்துயர்

மனிதத்தை மறந்துவிட்டு
நகருகின்ற வாழ்வியலை
மீட்டுத்தர வந்ததுவோ
கொரோனா உயிர் கொல்லி

வையத்தில் பிற உயிரும்
வாழ்வதற்கு நீதி தரா
மனித குல உயிரெடுக்க
வந்த கொடு நோயிதுவோ?

சுய சுத்தம் என்பதெல்லாம்
பேச்சளவில் போனதனால்
சுகாதார நெறிமுறையை
புகட்ட வந்த புது வினையோ?

இயந்திரமாய் மாறி இன்று
பணம் பொருள் தேடி ஓடும்
மனிதர்க்கும் குடும்ப பாசம்
வீட்டுக்குள் காட்டும் பிணியோ?

விளையாட்டாய் எண்ணாதே
விபரீதம் உள்ளது காண்
கேலி கிண்டல் செய்வதெல்லாம்
பெருந்துயராய் நேர்ந்திடும் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசு நாடுகளே
கதி கலங்கும் பேரிடர் தான்
நாளாந்தம் அதிகரிக்கும்
மரணத்தின் கொடுந்துயரம்

விந்தை செய்த விஞ்ஞானம்
தோற்றுப் போய் தலை குனிய
காக்கும் என்ற கடவுளரும்
கதவடைப்புச் செய்தனரோ?

மனிதத்தைக் காப்பதற்கு
இயற்கை தந்த வாய்ப்பிதுதான்
இயற்கையோடு இசைந்து வாழ
காலம் இட்ட கட்டளை தான்

தன்னலமும் பொது நலமும்
பேணிக்காத்து மானிடனே
வீட்டுக்குள்ளே நீயிருந்து
நாட்டை விட்டு நோயை விரட்டு

இன மத மொழி கடந்த
ஓரணியில் திரண்டு நின்று
மனிதத்தால் மனிதம் வென்று
மனிதனே புனிதனாகு!

●

22.03.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவின் கைதி

அகிலத்தை ஆண்டவன்
அடங்கியின்று போனான்
வீட்டுக்குள் விலங்கிட்ட
சிறைக் கைதி ஆனான்

ஆணவம் அகந்தை
மமதையின் உச்சத்தில்
தவறுகள் புரிந்தான்
இறையையும் மறந்தான்

இயற்கையைத் தடுத்து
உயிர்களை வதைத்து
விண்வெளி தன்னிலும்
ஆதிக்கம் கொண்டான்

மனிதனை மனிதனே
அடிமைத்தனம் செய்தான்
சாதி மத பேதங்களால்
பிரிவினையும் கண்டான்

கீழோர் மேலோர் என
விதிகள் பல வகுத்தான்
ஏழை எளியோர் வாழ்வை
எள்ளி ஏளனம் செய்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவற்றவனை ஆள
வலுவானவன் முயன்றான்
அதிகாரம் கொண்டவனே
அநீதி வழி தொடர்ந்தான்

ஒற்றுமையும் இழந்தான்
சமத்துவத்தை மறந்தான்
நீதிநெறி தவறிப் பல
பழி பாவங்கள் புரிந்தான்

கண்காணக் கிருமியினால்
வாழ்வையின்று இழந்தான்
கொரோனாவின் கோரத்தால்
உயிர்வாழத் தவிக்கின்றான்

பூலோக வாழ்வியலில்
நரகத்தை உணருகிறான்
நகரவே முடியாது முடங்கி
நகரத்திலும் திணறுகிறான்

இன்று உயிரிகள் மகிழ்கிறது
இயற்கையும் ஓய்வெடுக்கிறது
கடவுளரும் தனித்திருக்க ஏனோ
காலம் நம்மை நகைக்கிறது.

●

05.04.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பில்லாக் கிறுக்கல்கள்

உன் கிறுக்கலும் கவிதை தான்
எனக்கு மட்டும்.

●

என் நிழல் கூட இப்போது நிலத்தில் வீழ்வதில்லை
தாங்கிக்கொள்ள நீ இருப்பதினால்.

●

விழிகள் கூட உன்னை மட்டுமே உறவாகக் கேக்கிறது
இமை மூடும் போது கனவாக நீ வேண்டும்.

●

உயிரே, உன்னை நான் நினைக்கப் போவதில்லை -
காரணம்
என் நினைவே நீ தானே.

●

அன்பே, எனக்குள் நீ இருக்கிறாய் என்பதை
என் இதயத் துடிப்பின் ஒவ்வொரு அதிர்விலும்
உணர்கிறேன்.

●

தூக்கம் பறித்த உன் நினைவுகளும்
ஏக்கம் விதைத்த கடந்தகால அன்பின் சுவடுகளும்
சுவாசத்தோடு கலந்து இதயத்தை பந்தாடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இரவுகள் உன் ஒளிகளையே
வெள்ளை அடித்துக் கொள்கின்றன
என் பகல்கள் உன் நிழல்களையே
ஆடையுடுத்திக் கொள்கின்றன
என் கனவுகள் உன் நினைவுகளையே
கவிதைகளாகச் சேமித்துக் கொள்கிறன.

●

அன்பு வடிவம் பெறுகின்றது
அன்பே உன் வடிவில்.

●

விழிகள் உறங்கும் பொழுதுகளிலும்
என் இதயம் விழித்திருக்கின்றது - உன்
நினைவுகளோடு.

●

இதமாக வீசும் இளம் தென்றலாக
அவள் புன்னகை,
இதயம் எங்கும் குளிரூட்டிச் செல்கின்றது..
மேகங்கள் கூட்டம் கூடி
மழை தூற எத்தணித்தது போல்,
ஓர் வார்த்தை பேசிவிடத் தவிதவிக்கிறது மனது,
இருந்தும் உன் மௌனமே போதுமென்று
விடைபெற்றது வார்த்தைகள்.

●

விண்ணை விட்டு நிலவு நீங்கினாலும்
உன் நினைவு மட்டும் என்னை விட்டு நீங்கியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனமாக வாழக் கற்றுக்கொண்டேன்
தேவதையே உன் நினைவுகளைச்
சிறிதளவு கூட செலவு செய்ய விருப்பமில்லாமல்.

●

கோப்பையில் மீதமாக எஞ்சியிருக்கும்
தேநீரை மொய்த்த எறும்புகளாய்
என்னைத் தின்று தீர்த்துக் கொண்டிருக்கிறது
உன்னைப் பற்றிய நினைவுகள்.

●

உன் மீச்சிறு புன்னகை பார்த்து
நந்தவனம் அழகா?
அதில் பூக்கள் அழகா? - என்று
ஆராய்ச்சி செய்கிறது என் ஆழ் மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்

உதயன்
தினக்குரல்
மெட்ரோ news
தினகரன்
சக்தி FM

மற்றும்,

வெளியீட்டு அனுசரணை
மீரா பியூட்டி கேயர்

கவிஞரின் கவிதை நூல்கள்

| | |
|---|---|
| பொற்கனவு | - 2018 |
| நிலா நாழிகை | - 2018 |
| கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும் | - 2019 |
| கார்காலப் புலர்வுகள் | - 2021 |
| பேரன்பின் படிமங்கள் | - 2022 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீரா அன்பின் தேடலும், ஏக்கமும்
கொண்டாட்டமும் நிறைந்தவை
ரஜிந்தனின் இப் பேரன்பின் படிமங்கள்..
இவற்றின் நிகழ் கணங்கள் பலவற்றை
நீங்கள் வாழ்வில் பலமுறை சந்தித்திருப்பீர்கள்.
அன்பினைக் காவி வரும் இக் கவிதைகளின்
சொற்களுக்கு அலையின் லாவகம்..
என் மனம் கவர்ந்த வரிகளில் ஒன்று
'அவளை விடப் பேரழகு அவள் நினைவுகள்'
இது இனிக்கும் தமிழ்!

- வேலணையூர் தாஸ்.

ISBN:978-624-97399-2-5

9786249739925

Rs.299/-

VIJAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org